# ஏற்றுமதியில் வெளிப்படைத்தன்மை எளிதான முறையில் ஒழுங்குபடுத்தப்படுமா?

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக,4-

ஏற்கனவே பல துறைகளில் மதிப்பு கூட்டல் (*Value Addition*) முக்கியத்துவம் பெறும் நிலையில், ஏற்றுமதி முறையில் வெளிப்படைத்தன்மை (*Transparency*) மற்றும் எளிதான ஒழுங்குமுறை (*Ease of Compliance*) ஏற்படுத்த அரசு எந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

குறைந்த முதலீடு கொண்ட சிறு நிறுவனங்கள், மூன்றாம் தரப்பைச் சேர்ந்த ஏற்றுமதி நிறுவனங்கள் (*Thirdparty exporters*) அல்லது வர்த்தக ஏற்றுமதியாளர்கள் (*Merchant exporters*) மூலம் தங்களுடைய விநியோகத்தை விரிவுபடுத்த அரசு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளதா?

எடுத்திருந்தால், அத்தகைய திட்டங்கள் குறித்து விரிவாக விளக்குங்கள், எளிமைப்படுத்தப்பட்ட நடைமுறைகள், ஊக்கத் திட்டங்கள் அல்லது டிஜிட்டல் தளங்கள் குறித்து விவரங்கள் தரவும்.

வேளாண்மை சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு ஏதேனும் திட்டங்களை மேற்கொண்டுள்ளதா, குறிப்பாக ஈரோடு போன்ற வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவாக? இருந்தால், அந்த திட்டங்கள் பற்றிய விவரங்களை கூறவும் என்று ஈரோடு தொகுதி உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பதில்

அ முதல் இ வரை குறைந்த முதலீட்டுடன் செயல்படும் சிறு, குறு தொழில்களிலிடையே ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், ஏற்றுமதி முறைமையில் (*Method*) உள்ள நடைமுறைகளை (*compliances*) எளிமைப்படுத்தவும், செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை உருவாக்கவும், ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதில் முக்கியமானவை பின்வருவன:

(1) வணிகம் மற்றும் தொழிற்சாலை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் *Directorate General of Foreign Trade (DGFT)*, வெளிநாட்டு வர்த்தக செயல்முறைகளை எளிமைப்படுத்தவும், நவீன மயமாக்கவும் பல்வேறு டிஜிட்டல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. DGFT இணையதளத்தில் *Advance Authorisation, Export Promotion Capital Goods (EPCG)*, மற்றும் *Status Holder* சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு *Foreign Trade Policy (FTP)* பயன்களுக்கான விண்ணப்பமும் அனுமதியும் முழுமையாக ஆன்லைனில் பெறுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த இணையதளம் *ICEGATE, GSTN, MCA*, மற்றும் *PFMS* ஆகிய தரவுத் தளங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால், தரவுகளை சரிபார்க்கவும், செயலாக்கத் திறனை மேம்படுத்தவும் வழிவகுக்கிறது.

(2) DGFT மேற்கொண்ட மற்ற முக்கிய முயற்சிகளில், *eBRCs*க்கான சுயசான்றளிப்பு முறை மற்றும் முழுமையாக டிஜிட்டல் வடிவத்தில் செயல்படும் *eCertificate of Origin (eCoO 2.0)* முறையும் அடங்கும். இது நிகழ்நேர அங்கீகாரத்தை வழங்கி, இந்த சான்றிதழ் வாங்கும் முறையை எளிமைபடுத்தியுள்ளது. மறுசீரமைக்கப்பட்ட *eCoO 2.0* முறை, *Preferential* மற்றும் *NonPreferential CoOs* ஆகிய இரண்டிற்கும் பொருந்தும் வகையில் செயல்படுகிறது. இது *QR code* மற்றும் *Aadhaar* அடிப்படையிலான *esignature* மூலம் முற்றிலும் ஆன்லைனில் சான்றுகள் வழங்கப்படுவதை உறுதிசெய்கிறது. இந்த ஒருங்கிணைந்த இணையதளம், ஏற்றுமதியாளர்கள் மற்றும் சான்று வழங்கும் நிறுவனங்கள் மற்றும் *Chambers of Commerce*ஐ ஒரே தளத்தில் இணைத்து, அங்கீகாரத்தின் நம்பகத்தன்மையையும், சேவை தரத்தையும் மேம்படுத்துகிறது.

(3) இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் வகையில், வணிகம் மற்றும் தொழிற்சாலை அமைச்சகம் *Trade Connect ePlatform (https://www.trade.gov.in/)* எனும் ஒரே முகப்பை கொண்ட ஆன்லைன் தளத்தை தொடங்கியுள்ளது. இது ஏற்றுமதி தொடர்பான கேள்விகளுக்கான பதில்களையும், சர்வதேச சந்தைகளை அணுகும் முறையை மேம்படுத்துவதற்கான வசதியையும் வழங்குகிறது.

இந்த இணையதளத்தின் முக்கிய அம்சங்களில் அடங்குவது:



*Trade Agreements* குறித்த விரிவான தகவல்கள்,

*Tariff Explorer* மூலம் FTA பயன்களை மதிப்பீடு செய்யும் வசதி,

*Country and Product Guides* வாயிலாக சந்தையை அணுகும் முறை மற்றும் ஒழுங்குமுறை கடைபிடிப்பு வழிகாட்டுதல்கள்,

*Global eCommerce Guide*,

உலகளாவிய *Trade Events* குறித்த தகவல்கள்.

மேலும், இந்த தளத்தில் *EXIM Paathshaala* (கற்றல் தொகுப்புகள்), "*Ask an Expert*" அம்சம் (வியாபாரம் தொடர்பான சந்தேகங்களுக்கு நிபுணரிடம் நேரடி விளக்கம் பெற), வெளிநாட்டு வாடிக்கையாளர்கள், இந்திய ஏற்றுமதியாளர்களை கண்டுபிடிக்க "*Source from India*" (*search engine*) மற்றும் ஒருங்கிணைந்த *Certificate of Origin* வழங்கும் முறை ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

(4) மேலும், பங்குதாரர்களுடன் நேரடி தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில், அமைச்சகம் *JanSunwai* என்ற டிஜிட்டல் முறையிலான புகார் தீர்க்கும் வசதியை செயல்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு, ஏற்றுமதியாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கிடையே தேவைக்கேற்ப காணொலி சந்திப்புகளை ஏற்படுத்தும் வசதியை வழங்குகிறது. இது புகார்களை உடனுக்குடன் தீர்க்கவும், அதிகாரிகளை நேரடியாக அணுகவும், மற்றும் *Audit Trail* மூலமாக செயல்முறைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கிறது.

(5) மேலும், *Foreign Trade Policy (FTP)* 2023இன் 4 மற்றும் 5ஆம் அத்தியாயங்களின் கீழ் செயல்படும் ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டங்களின் நன்மைகள், சிறு தொழில்கள், மூன்றாம் தரப்பு ஏற்றுமதியாளர்கள் மற்றும் வர்த்தக ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தகுதியுடைய ஏற்றுமதியாளர்களுக்கும் கிடைக்கின்றன. இதனை மேலும், கடைபிடிப்பு நடைமுறைகளை எளிமைப்படுத்தும் வகையில் உருவாக்க, ஒன்றிய அரசு பல ஆதரவுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. குறிப்பாக, *Advance Authorisation* மற்றும் *Export Promotion Capital Goods (EPCG)* போன்ற திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் MSME நிறுவனங்களுக்கு விண்ணப்பக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

(6) DGFT செயல்படுத்தும் முக்கிய தொடர்பு முயற்சியாக உள்ள *Niryat Bandhu Scheme*, புதிய மற்றும் சிறு ஏற்றுமதியாளர்களுக்கு முழுமையான வழிகாட்டுதல், பயிற்சி மற்றும் தொடக்க உதவிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம், அவர்களை சர்வதேச வர்த்தகத்திற்குள் நுழையச் செய்யவும், இந்தியாவின் மொத்த ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்தவும் உதவுவதாகும்.

இத்தகைய முயற்சிகள், சிறு ஏற்றுமதியாளர்களுக்கான சந்தையை அணுகும் வசதியை உயர்த்தி, நடைமுறை சிக்கல்களை குறைத்து வருகின்றன.

(ஈ) ஒன்றிய அரசு, அனைத்து வகையான ஏற்றுமதியாளர்களுக்கும், குறிப்பாக ஈரோடு போன்ற வேளாண்மை மையமாக செயல்படும் பகுதிகளில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி முறையில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை எளிமைப்படுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. *Foreign Trade Policy (FTP)* 2023இன் அத்தியாயம் 3ன் கீழ் செயல்படும் *District as Export Hub* முயற்சியின் மூலம், நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்றுமதிக்குத் தகுதியான தயாரிப்புகள் மற்றும் சேவைகள், அதாவது புவிசார் அடையாளப் (GI) பொருட்கள், வேளாண் *Clusters* மற்றும் பொம்மை *Clusters* ஆகியவை அடையாளம் காணப்படுகின்றன.

இந்த முயற்சிக்கு நிர்வாக ஆதரவளிக்க, மாநில/யூனியன் பிரதேசங்கள் அளவில் *State Export Promotion Committees (SEPCs)* மற்றும் *District Export Promotion Committees (DEPCs)* அமைக்கப்பட்டுள்ளன. இவை, மாவட்டங்களில் ஏற்றுமதி வளர்ச்சிக்கு தடையாக உள்ள சிக்கல்களை சரி செய்து, ஏற்றுமதி வளர்ச்சியை வலுப்படுத்தும் பணியில் செயல்பட்டு வருகின்றன.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், ராயவரம் சந்தைப்பேட்டை சமுதாய கூடத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்களில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு, பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

### உணவு பதப்படுத்தும் தொழில்களை ஆதரிப்பதற்காக

# ஒன்றிய அரசு புதிய மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதா?

## மக்களவையில் அருண் நேரு கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு எம்.பி பேசியதாவது:

நுண், சிறு, நடுத்தர மற்றும் பெரிய அலகுகள் உட்பட பல்வேறு அளவிலான உணவு பதப்படுத்தும் தொழில்களை (எப்.பி.ஐ.) ஆதரிப்பதற்காக அரசாங்கம் புதிய மானியத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இந்தத் திட்டங்களின் மொத்த ஒதுக்கீடு மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்;

அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும் பழங்கள், காய்கறிகள் மற்றும் அழுகக்கூடிய பொருட்களின் அடுக்கு ஆயுளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுத்த குறிப்பிட்ட நடவடிக்கைகள்;



வேர்ல்ட் ஃபுட் இந்தியா போன்ற நிகழ்வுகள் மூலம் முதலீடு மற்றும் உலகளாவிய கவனத்தை அதிகரிக்க அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும் மதிப்பு கூட்டலை மேம்படுத்துதல், உணவு வீணாவதைக் குறைத்தல் மற்றும் இந்தியாவை ஒரு முன்னணி உணவு பதப்படுத்தும் இடமாக ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்தத் திட்டங்கள் எவ்வாறு நோக்கமாகக் கொண்டுள்ளன?

இதற்கு உணவு பதப்படுத்தும் தொழில்கள் துறை அமைச்சர் பதிலளிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, புனித அந்தோணியார் நடுநிலைப்பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில், பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார்ஆட்சியர் செல்வி சங்கீதா, உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு.சோமசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி, அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் / பொறுப்பாளர் ஒப்புதலோடு **விழுப்புரம் மத்திய, திருப்பூர் மத்திய, ஈரோடு மத்திய** ஆகிய மாவட்டங்களின் தி.மு.க. பொறியாளர் அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

அமைப்பாளர் - புகழ். செல்வகுமார் 257/3, நடுத் தெரு, அத்தியூர்திருவாதி மற்றும் அஞ்சல், விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். குமரன் வி.புதூர் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 2) வி. கிருஷ்ணமூர்த்தி 38, மேல்வன்னியூர் தெரு, வி. மருதூர், விழுப்புரம். 3) எஸ். கோபிநாத் 103, திருச்சி மெயின் ரோடு, பிடாகம் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம். 4) எம். பிரசாந்த் புளிச்சம்பள்ளம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ஆர். வெங்கடேசன் 165, வடக்கு தெரு, சாலை அகரம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 6) என்.எம். திருமுருகன் 257/ஏ, அம்பேத்கர் தெரு, நல்லாவூர் மற்றும் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 7) அ. ரீகன்ராஜ் மெயின் ரோடு, பட்டரைபாதி, மணமேடு அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

அமைப்பாளர் – மு. அருள்பிரகாஷ் 102, ஸ்ரீ சக்தி அவென்யூ, வஞ்சிபாளையம் பிரிவு, இடுவம்பாளையம், திருப்பூர் - 641687.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெமினி என். நடராஜன் 4/33, பாளையக்காடு 3வது குறுக்கு வீதி, ஊத்துக்குளி ரோடு, திருப்பூர் - 641601. 2) வா. ஜெகநாதன் 3/1298, அண்ணாமலை கார்டன், பூமலூர் ரோடு, பல்லடம் – 641662. 3) நவீன் பிரசாத் 13-ஏ, குழந்தையப்பா நகர், ஊத்துக்குளி ரோடு, பாளையக்காடு, மன்னரை, திருப்பூர் - 641607. 4) ராஜேஷ் கண்ணன் 31/1, பொன்முத்து நகர் 5வது வீதி, முத்தனம்பாளையம் ரோடு, விஜயாபுரம், திருப்பூர் – 641606. 5) மு. யோகானந்த் 2/525, சாமியப்பா பில்டிங் ஆண்டிபாளையம், மங்களம் ரோடு, திருப்பூர் – 641687.

### ஈரோடு மத்திய மாவட்டம்

அமைப்பாளர் – எஸ். கருணாகரமூர்த்தி 449, எச்.ஜெ.ஜெ. நகர், சக்தி ரோடு, கவுந்தப்பாடி – 638455, ஈரோடு.

துணை அமைப்பாளர்கள் – 1) இ. கார்த்திக் 1/319, மெயின் ரோடு, நடுப்பட்டி, பல்லகவுண்டம்பாளையம் - 638056, ஈரோடு. 2) எஸ். சுதானந்த் 2/282, ஏ.பெத்தகாபாளையம், அட்டவணைப்புதூர், முகாசிபுதூர் அஞ்சல் – 638314. ஈரோடு. 3) எம். வெங்கடேஷ் 462, பட்லூர் நால்ரோடு, பட்லூர் - 638314, ஈரோடு. 4) ராயல் குமார் (எ) குமரவேல் 7, சோளிபாளையம், கே.எஸ். பாளையம், பெருந்துறை - 638052, ஈரோடு. 5) சிந்தூரி இளங்கோவன் 87/43, பழைய பஞ்சாயத்து ஆபீஸ் ரோடு, பவானி, ஈரோடு.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-08-2025.

கு. கருணாநிதி
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி வி. முத்து
### ஆகஸ்ட் 4 (2016)



சங்ககிரி பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

ஒன்றுபட்ட சேலம் மாவட்ட பிரதிநிதியாகவும் – மாவட்ட துணைச் செயலாளராகவும் – நாமக்கல் மாவட்ட துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

1971, 1996 ஆகிய இரண்டு முறை சங்ககிரி தொகுதியில் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குமரி மணிமாறன்
### ஆகஸ்ட் 4 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில் பணியாற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோரின் பணிகளை போற்றும் வகையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.